©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 105] CHENNAI, MONDAY, APRIL 22, 2013
Chithirai 9, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், நீலகிரி மாவட்டம்.**

**நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.அ2 எண் 1667/2011.)*

**No. VI(2)/59(b)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த உபதலை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வி. சிதம்பரம் என்பவர் உபதலை ஊராட்சிக்கு சொந்தமான தேயிலை தோட்டத்தை மறு ஏலம் விட்டது பொது ஏலம் மற்றும் விற்பனை தொடர்பான நடைமுறை விதிகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து வருமானம் இழப்பு ஏற்பட்டது. தேயிலை தோட்ட வரவு–செலவுகளை முறையான பராமரிப்பு செய்யாதது குறிப்பிட்ட செலவினங்களுக்கு மேல் செலவினம் மேற்கொள்ளும் போது உரிய ஊராட்சி ஆய்வாளரிடம் முன் அனுமதி பெறாதது தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்ற தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தில் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி உபதலை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வி. சிதம்பரம் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

நீலகிரி,
**2013 ஏப்ரல் 20.**

**அர்ச்சனா பட்நாயக்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (105)